ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2166/14 - 2020 මාර්තු මස 11 වැනි බදාදා - 2020.03.11

*2166/14 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (x) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை இரசாயனவியல் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை, இரசாயனவியல் நிறுவகம் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், அதற்கான சுருக்கீடு இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதும், இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்டதுமான பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்றதான அதன்கண் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டம் அளிக்கும் நிறுவகமாக இலங்கை, இரசாயனவியல் நிறுவகத்தை ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை** I

*நிபந்தனைகள்*

1. *இலங்கை, இரசாயனவியல் நிறுவகமானது, இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை ராஜகிரிய, வெலிகட, கோட்டே வீதி, அடமந்தான இல்லத்தில் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.*

2. *இலங்கை, இரசாயனவியல் நிறுவகமானது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை, முனைவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.*

3. இலங்கை, இரசாயனவியல் நிறுவகமானது, இரசாயன விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில், உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞானம் என்ற பாடத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்திற்கான சுருக்கீடு* |
|---|---|
| இரசாயன விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (இரசாயன விஞ்ஞானம்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, மாச்சு 10.*

*03-932*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.